பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 05 சனிக்கிழமை 19.06.2021 கதிர் 92

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 1,281 பேர் கைது

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 1,281 பேர் கடந்த 24 மணித்தியாலங்களில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹண இன்று காலை தெரிவித்தார்.

மாத்தளைப் பகுதியிலேயே அதிகமானோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் ☞2

# தெற்கு அரசியலில் பெரும் பரபரப்பு நாடாளுமன்றம் வருகின்றார் பஸில்

## நிதி அமைச்சுப் பதவியும் ஒப்படைப்பு

**அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய பின்னர், தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக பஸில் ராஜபக்ஷ சத்தியப்பிரமாணம் செய்வார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன என்று பிரபல சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

**நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றதும் பஸில் ராஜபக்ஷவுக்கு நிதி அமைச்சு பதவி வழங்கப்படவுள்ளது எனவும், அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் மேற்படி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.** ☞2



## கம்மன்பிலவுக்கு சு.க. ஆதரவு பிரேரணையை எதிர்க்க முடிவு

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

இதன்படி ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் சில உறுப்பினர்களால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைக்கு எதிர்ப்பை வெளியிடவும், கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்ப்பதற்கும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவிப்பு விரைவில் உத்தியோகபூர்வமாக சு.கவின் பொதுச்செயலாளரால் வெளியிடப்படவுள்ளது.

## தொற்று நோய்ப் பிரிவு பணிப்பாளர் சுதத் சமரவீரவுக்கு திடீர் இடமாற்றம்

சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியநிபுணர் சுதத்சமரவீரவுக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி சுகாதார அமைச்சின் டெங்கு நோய்த் தடுப்புப் பிரிவின் பணிப்பாளராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், வைத்தியர் சமித கினிகே தொற்று நோய்ப் பிரிவின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கொரோனா ☞2



## ரணிலுடன் டீலா? மறுக்கிறார் நாமல்



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் உட்பட எதிர்க்கட்சிகளின் தலைவர்களுடன் அரசுக்கு எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் கிடையாது.

- இவ்வாறு சிறிலங்கா பொதுஜன முன்னணியின் முக்கியஸ்தரும் அமைச்சருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை, எரிபொருள் விலை உட்பட சமகால ☞2

## மாகாணத்துக்குள் மட்டும் போக்குவரத்துச் சேவைகள்

### ரயில் சேவையையும் முன்னெடுக்கத் தீர்மானம்

எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4 மணிக்கு பயணக் கட்டுப்பாடு நீக்கப்பட்டதும், மாகாணத்துக்குள் மாத்திரம் போக்குவரத்து சேவைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

21ஆம் திகதி முதல் எதிர்வரும் 23ஆம் திகதி இரவு 10 மணி வரை, அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் பயணிகளுக்காக மேல் மாகாணத்துக்குள் மாத்திரம் 17 ரயில் சேவைகளை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக ரயில்வே போக்குவரத்து அத்தியசட்கர் காமினி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

பிரதான மார்க்கத்தில் 6 ரயில்களும் கரையோர மார்க்கத்தில் 4 ரயில்களும் களனிவெள மார்க்கத்தில் 4 ரயில்களும் புத்தளம் மார்க்கத்தில் 3 ரயில்களும் சேவையில் ஈடுபடவுள்ளன.

அரசின் தீர்மானத்தின் பிரகாரமே எதிர்வரும் 23ஆம் திகதியின் பின்னர் சேவையில் ஈடுடுவது குறித்து தீர்மானிக்கப்படும் என ரயில்வே போக்குவரத்து அத்தியசட்கர் காமினி செனவிரத்ன மேலும் கூறியுள்ளார். ☞2

## தெமட்டகொடையில் மேலும் 15 வைரஸ் தொற்றாளர்கள்!

வேகமாகப் பரவி வரும் இந்திய ‘டெல்டா’ கொரோனா வைரஸ் முதலில் அடையாளம் காணப்பட்ட தெமட்டகொடையில் மேலும் 15 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்கள் எந்த வகையான கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை உறுதிப்படுத்த, சம்பந்தப்பட்ட மாதிரிகள் ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

தெமட்டகொடை ஆரமவீதி பகுதியில் ஏற்கனவே 5 பேர் இந்திய ‘டெல்டா’ கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளதையடுத்து அங்கு மொத்தம் 129 பேர் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் 15 பேருக்குக் கொரோனா ☞2

## 52 கிலோகிராம் ஹெரோயினுடன் உப பொலிஸ் இன்ஸ்பெக்டர் உட்பட மூவர் சிக்கினார்கள்!

52 கிலோகிராம் ஹெரோயினுடன் பயணித்த மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அஹுங்கம, ஹிக்கடுவ, பத்தேகம மற்றும் காலி ஆகிய இடங்களில் நேற்றிரவு முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே குறித்த சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

களுத்துறை தெற்கு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உப பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரும் இதில் அடங்குகின்றார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹன தெரிவித்துள்ளார்.

ஹெரோயின் போதைப்பொருளுடன் பயணித்த இரண்டு வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர்களை நீதிமன்ற அனுமதியுடன் 7 நாள்கள் தடுத்து வைத்து விசாரணைக்குட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## எம்.பி. ஆசனம் ஒன்றை இழந்தது யாழ். மாவட்டம்

2020ஆம் ஆண்டு வாக்காளர் பதிவுப் பட்டியலின் பிரகாரம் யாழ்ப்பாணம் மாவட்டம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் ஆசனத்தை இழந்துள்ளது எனத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற ஆசனங்கள் ஆறாகக் குறைவடைந்துள்ளது.

இதனிடையே கம்பஹா மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை ஒன்றால் அதிகரித்துள்ளது.

இதற்கமைய கம்பஹா மாவட்டத்தின் புதிய நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை 18 இலிருந்து 19 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்துக்கு 9 நாடாளுமன்ற ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.

எனினும், இந்த எண்ணிக்கை 2014ஆம் ☞2

## ரணிலுடன் டீலா? ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவகாரங்கள் தொடர்பில் ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் நாமல் மேற்கண்டவாறு கூறினார்.

இவை குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

எரிபொருள்களின் விலையை அதிகரிப்பது தொடர்பில் வாழ்க்கைச்செலவு தொடர்பான அமைச்சரவை உப குழு முடிவெடுத்தது. அது தொடர்பில் ஜனாதிபதி அறிக்கையொன்றை விடுத்திருந்தார்.

எதிர்காலத்தில் விலை உயர்வில் மாற்றங்கள் ஏற்படுமாயின் அது தொடர்பில் கலந்துரையாடி முடிவெடுக்கப்பட்டு உரியவகையில் தீர்மானம் அறிவிக்கப்படும்.

அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதற்கு முன்னர் தமது தலைவர் ரணிலா, சஜித்தா என்பது குறித்து ஐக்கிய மக்கள் சக்தியினர் முடிவுக்கு வரவேண்டும். தமது பிரச்சினையை தீர்த்துக்கொண்டே பிறர் மீது கவனம் செலுத்த வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜே.வி.பியின் தலைவர் அநுரகமார திஸாநாயக்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுடன் எமக்கு எவ்வித கொடுக்கல், வாங்கல்களும் கிடையாது - என்றார்.

## எம்.பி. ஆசனம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டுக்கான வாக்காளர் பதிவுப் பட்டியலின்படி 7 ஆசனங்களாகக் குறைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தொற்று நோய்ப் பிரிவு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான தகவல்களை வெளியிடுவது தொடர்பில் சுதத் சமரவீரவுக்கு எதிராகப் பல தரப்பினரும் குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். சமூகத் தொற்றை மூடிமறைக்கின்றார் என அரச வைத்திய அதிகாரி சங்கம்கூட சாடியிருந்தது.

கொரோனா மரணங்கள் தொடர்பில் வெளியிடப்பட்டிருந்த தரவுகள் சம்பந்தமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் நேற்று அதிருப்தியை வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அவருக்குத் திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

## தெற்கு அரசியலில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பினராக வருவதற்காகப் பதவி துறக்கவுள்ள தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருடன் இந்த விவகாரம் தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்துரையாடியுள்ளார் எனவும் குறித்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா சென்றுள்ள பஸில் ராஜபக்ஷ எதிர்வரும் 23ஆம் திகதி நாடு திரும்புகின்றார்.

## தனிமைப்படுத்தல் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் அவர் கூறினார்.

கடந்த ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதிக்குள், தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 39 ஆயிரத்து 592 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## மாகாணத்துக்குள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வாறாயினும் பஸ் சேவையை முன்னெடுப்பது குறித்து இதுவரை தீர்மானிக்கவில்லை என இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

பஸ் சேவை குறித்த ஆலோசனைக்காக காத்திருப்பதாக சபையின் பிரதி பொதுமுகாமையாளர் ஏ.எச்.பண்டுக குறிப்பிட்டுள்ளார்.

எனினும், பயணக் கட்டுப்பாடு நீக்கப்பட்டதும் மாகாணத்துக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பஸ் சேவைகளை முன்னெடுக்கத் திட்டமிப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

## தெமட்டகொடையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைரஸ் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

'டெல்டா' வகை வைரஸ் தொற்றின் அபாயத்தைக் கருத்தில்கொண்டு தெமட்டகொடை ஆரம வீதிப்பகுதியில் உள்ள மக்களுக்கு இன்று கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆரமவீதிப்பகுதியில் உள்ள அனைத்து மக்களுக்கும் கொரோனாத் தடுப்பூசி ஏற்ற நாங்கள் திட்டமிட்டுள்ளோம். ஏனெனில் இந்தப் பகுதியில் இந்திய 'டெல்டா' வகை கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். நேற்றைய பி.சி.ஆர். பரிசோதனைகளில் மேலும் 15 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொழும்பு பகுதியில் நேற்று எழுமாறாக நடத்திய பி.சி.ஆர். பரிசோதனைகளில் இருந்து சுமார் 70 கொரோனாத் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று கொழும்பு மாநகராட்சி மன்றத்தின் தொற்றுநோயியல் நிபுணர் வைத்தியர் தினுகா குருகே தெரிவித்துள்ளார்.


## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.







நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# மீண்டும் தவறிழைப்பு

மீண்டும் அரசு தவறிழைக்கின்றது என்று மருத்துவ நிபுணர்களின் சங்கம் விசனத்துடன் கருத்து வெளியிட்டிருக்கின்றது.

பயணக் கட்டுப்பாடுகளை நாளை மறுதினம் முதல் தளர்த்தும் அரசின் முடிவு தொடர்பிலேயே அந்தச் சங்கம் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றது.

இந்தியாவின் திரிவடைந்த கொவிட் 19 ரகத்தில் டெல்டா வைரஸ் இலங்கையில் பரவுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் பயணக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தும் முடிவை அரசு எடுத்திருப்பது ஆபத்தானது என அச்சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் டாக்டர் லக்குமார் பெர்னாண்டோ தெரிவித்திருக்கின்றார்.

"மருத்துவ நிபுணர்கள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவும், எமது சங்கத்தின் கொவிட் குழுவும் நேற்று முன்தினம் (வியாழனன்று) கூடின. கொரோனா வைரஸின் இந்தியத் திரிவு இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால் பயணக் கட்டுப்பாட்டை 28 ஆம் திகதி வரை நீடிக்குமாறு அரசைக் கோருவது எனத் தீர்மானித்தோம்" – என்றார் அவர்.

"இந்தியாவில் திரிவடைந்த டெல்டா ரக கொரோனா வைரஸ் கொழும்பு தெமட்டகொட பகுதியில் பரவுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது பேராபத்துக்கான எச்சரிக்கை. இந்த விடயத்தை சாதாரணமானதாகக் கருதிப் புறம் ஒதுக்கி விட முடியாது.

"பிரிட்டனில் திரிவடைந்த வைரஸுடன் ஒப்பிடுகையில் இந்தியாவில் திரிவடைந்து அவதானிக்கப்பட்ட டெல்டா வைரஸ் பரவல் வீச்சமும் ஆபத்து வீரியமும் மிக அதிகம் கொண்டது. விரைந்து பரவும் தன்மைமிக்கது." என்று அவர் சுட்டிக்காட்டினார்.

"அதுவும் இந்தியத் திரிவு இங்கு அவதானிக்கப்பட்ட பின்னர், பயணத் தடையை நீக்குவது என்று தீர்மானித்திருப்பது மிகத் தவறான உத்தியாகும்." என்றும் அவர் சொல்கின்றார்.

"பிரிட்டனில் திரிவடைந்த வைரஸ் இலங்கையில் பரவுகின்றமையை கடந்த ஏப்ரல் 8 ஆம் திகதி நாம் கண்டுபிடித்தோம். ஆனால் அதைப் புறக்கணித்து மக்களை சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாட அனுமதித்தோம். அதன் விளைவையும் எதிர்கொண்டோம். அதேபோல இப்போது பிரிட்டனின் திரிவடைந்த வைரஸை விட மிக ஆபத்தானதும் பரவல் வீச்சம் வீரியமானதுமான இந்தியத் திரிவு வைரஸ் பரவுகின்றமை பற்றிய தகவல் கிடைத்த கையோடு பயணக் கட்டுப்பாட்டை நீக்கி, நாட்டைத் திறந்து விடுகின்றோம். மீண்டும் அரசு தவறிழைப்பதாகவே தோன்றுகின்றது.

"முடிவுகளை எடுப்பதில் சாத்தியப்பாடானவற்றை சிந்திக்கத் தவறுவோமானால் மதிப்பார்ந்த பல உயிர்களை நாம் காவு கொடுக்க நேரிடும். ஆகையினால் இந்த விடயம் குறித்து அரசு பரந்தளவிலான கலந்துரையாடலை நடத்துவதுடன், பயணக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தும் முடிவை மீள் பரிசீலனை செய்ய வேண்டும்." – என்று இலங்கையின் மருத்துவ நிபுணர்களின் சார்பில் அவர்களின் அமைப்பின் தலைவர் வைத்திய கலாநிதி லக்குமார் பெர்னான்டோ பகிரங்கக் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

இவ்விடயங்களில் வைத்திய நிபுணர்களின் கருத்தை ஆட்சித் தலைமை கவனத்தில் எடுக்காமல் தனது பொருளாதார நெருக்கடிகள் குறித்தே சிரத்தை எடுப்பதாகத் தெரிகின்றது.

இது தொடர்பில் நாட்டின் மூத்த தலைவர்களில் ஒருவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே தெரிவித்த ஒரு விடயத்தை அரசுக்கு இச் சமயத்தில் சுட்டிக் காட்டுவது பொருத்தமானதாகும்.

"நாட்டின் பொருளாதாரம் வீழ்ந்தால் மீண்டும் கஷ்டப்பட்டேனும் கட்டி எழுப்ப முடியும். ஆனால் பிரிந்து போகின்ற மனித உயிர்களை நாம் மீளப் பெற முடியாது. ஆகவே, உயிரிழப்புக்களைத் தவிர்க்கும் விடயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தீர்மானங்களை எடுப்பதே அரசின் தந்திரோபாயமாக இருக்க வேண்டும்" – என்று ரணில் தெரிவித்திருந்தார்.

ஆனால், கோட்டாபய ஆட்சிப் பீடத்தின் காதில் இந்த மனிதாபிமான உரைகள் – வேண்டுகோள்கள் – விழும் என்று எதிர்பார்ப்பது அறிவிலித்தனமாகும்.

நாட்டின் பிரச்சினைகளுக்கு மனித உயிரிழப்புகளையே பொருட்படுத்தாமல் தீர்வு காணலாம் என்ற ஈவு இரக்கமற்ற சிந்தனைப் போக்கில் பணியாற்றும் – மனிதாபிமானமற்ற – கொடூர அணிதான் இப்போது அதிகாரத்தைக் கைப்பற்றி வைத்திருக்கின்றது.

2006 – 2009 இல் இதனைத் தமிழர்கள் கண்கூடாக நேரில் பார்த்து, பட்டறிந்தார்கள். பல்லாயிரம் அப்பாவிப் பொதுமக்களின் படுகொலைகள் மீது இராணுவ வெற்றியைக் கட்டமைத்து விட்டு, மனித உயிரிழப்பு பூஜ்ஜியம் என்ற உலகத்தின் காதில் பூச்சூடிய கொடூர நிர்வாகக் கட்டமைப்பின் தலைவர்தான் இன்று நாட்டின் அதிபர்.

மனித உயிர்களை மதிக்கத் தெரியாத – ஈவு இரக்கமற்ற – அதே பண்பியல்பை முள்ளிவாய்க்கால் வரைக் காட்டிய இந்த அதிகாரப் பீடத்துக்கு மனித உயிரிழப்புகள் பெரிய விடயமாகத் தோற்றப் போவதில்லை. இந்த ஆட்சிப் பீடம் அப்படித்தான் நடக்கும். அதைத் தலையில் தூக்கி வைத்துக் கூத்தடித்த தென்னிலங்கைதான் இந்த விளைவுகளுக்கு முழுப் பொறுப்பு.

# பொதுப் போக்குவரத்து இன்மை இரணைதீவு மக்கள் கடும் சிரமம்



கிளிநொச்சி –இரணைதீவு பகுதிக்கான பொதுப்படகுப் போக்குவரத்து இன்மையால் தாங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என இரணைதீவு மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இரணைதீவிலிருந்து முழங்காவில் இரணைமாதா நகருக்கு வருவதற்கோ அல்லது இரணைமாதா நகரில் இருந்து இரணைதீவிற்கு செல்வதற்கான பொதுப் படகுப் போக்குவரத்துக்கள் எதுவும் இல்லாத காரணத்தால் நாங்கள் தொடர்ந்தும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றோம் என இரணைதீவு மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இரணைதீவு பகுதியில் தற்போது நிரந்தரமாகவும் தொழில் நிமித்தமும் 120 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள் குடியேறி வாழ்ந்து வருகின்றனர்.

சுமார் 22 வருடங்களுக்குப் பின்னர் மீள் குடியேறியிருக்கும் தமக்கு இதுவரை அடிப்படை வசதிகள் எதுவும் ஏற்படவில்லை. குறிப்பாக மருத்துவ வசதி மற்றும் சுகாதார வசதிகள், குடிதண்ணீர் வசதி உள்ளிட்ட வசதிகளை பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றோம் எனவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தமக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்வதற்காக முழங்காவில் பிரதேசத்துக்கு வரவேண்டியிருப்பதாகவும் தெரிவித்துள்ள இவர்கள் தங்களுடைய கடல் போக்குவரத்தில் பொதுவான போக்குவரத்து படகு இன்மையால் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர் எனத் தெரிவித்திருக்கின்றனர்.

அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்வது அல்லது பிரதேசத்திலிருந்து அத்தியாவசியத் தேவைகளுக்கு செல்வதற்கும் பொதுப்போக்குவரத்து இன்மையால் தாங்கள்பெரும்சிரமங்களைஎதிர்கொள்கின்றோம் எனத் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக மீன்பிடிப் படகுகளில் தாங்கள் பயணிக்க வேண்டும். அவ்வாறு பயணிக்கும்போது அந்த மீன்பிடி படகுகளுக்கு எரிபொருள்களை வழங்கியே தாங்கள் பயணம் செய்ய வேண்டிய நிலை காணப்படுவதாகவும் இந்த மக்கள் தெரிவித்துள்ளனனர்.

எனவே தமக்கு தனியாக ஒரு பொதுப் போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் ஒரு பொதுப்போக்குவரத்தை ஏற்படுத்தித் தர வேண்டும் என இரணைதீவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இந்திய வைரஸ் மாறுபாட்டின் ஆபத்து தொடர்பில் விஞ்ஞானிகள் எச்சரிக்கை

இலங்கையில் சமூக மட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இந்திய கொவிட் மாறுபாடு எனப்படும் டெல்டா பாரதூரமான திரிவு என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். தற்போது பரவியுள்ள கொவிட் மரபணுவை விடவும் இரண்டு மடங்கு வேகமாக இந்த வைரஸ் பரவக் கூடும் என விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மனிதர்களின் சுவாசக் கட்டமைப்பினுள் டெல்டா மாறுபாடு நீண்ட நேரம் இருக்கக் கூடும் எனவும், இதன் காரணமாக நோயத் தொற்று தீவிரமடையக் கூடும் எனவும் விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

டெல்டா மாறுபாடு எனப்படுவது திரிவடைந்த கொவிட் மரபணுவாகும். அது உலகில் 80 நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதில் இந்தியா, அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளே அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாகத் தளர்த்தப்படவிருந்த முடக்க நிலை கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து நீடிப்பதற்கு பிரித்தானியா தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சந்திம ஜீவந்தர, 'தெமட்டகொட பிரதேசத்தில் 8 பேரின் மாதிரிகள் மாத்திரமே பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன. அதில் 5 பேருக்கு டெல்டா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அங்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்ட ஏனைய நோயாளிகளின் மாதிரிகளும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அவற்றைப் பரிசோதனை செய்வதற்காக விசேட பரிசோதனை கிட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மக்கள் எந்த மாறுபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். சுகாதாரக் கட்டுப்பாடுகளைத் தீவிரமாகக் கடைப்பிடிக்க வேண்டும். தடுப்பூசிகளை உடனடியாகச் செலுத்திக் கொள்ள வேண்டும். இதன் ஆபத்தைத் தவிர்த்து விடலாம் என எங்களால் கூற முடியாது.

எவ்வளவு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டாலும் வைரஸ் வெற்றி பெறவே முயற்சிக்கும். இதனால் மக்கள் அவதானமாகச் செயற்பட்டால் மாத்திரமே ஏற்படும் ஆபத்துக்களை ஓரளவு குறைத்துக்கொள்ள முடியும்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஓய்வுபெற்ற ஜெனரல் தயா ரத்நாயக்க கைத்தொழில் அமைச்சு செயலராகிறார்



இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவராக செயற்பட்ட ஜெனரல் (ஓய்வு) தயா ரத்நாயக்கவுக்கு புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அவர், கைத்தொழில் அமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், துறைமுக அதிகாரசபையின் புதிய தலைவராக நிஹால் கெப்பற்றிபொல நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண, உடன் அமுலுக்கு வரும் வகையில், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன், பொலிஸ்மா அதிபர் சீ.டீ. விக்ரமரத்னவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.




# ஹோண்டுராஸ் சிறையில் கைதிகள் பயங்கர மோதல்; 5 பேர் உயிரிழப்பு

ஹோண்டுராஸ் நாட்டின் டெகுசிகல்பா அருகில் லா டோல்வா சிறைச்சாலை உள்ளது. உயர் பாதுகாப்பு கொண்ட இந்த சிறைச்சாலையில், நேற்று திடீரென கைதிகள் இடையே மோதல் ஏற்பட்டது. சிபாரியோ-18 என்ற குழுவினருக்கும், அவர்களின் பரம எதிரியான மாலா சால்வட்ருச்சா-13 என்ற குழுவினருக்கும் இடையே ஏற்பட்ட இந்த மோதலில், 5 பேர் உயிரிழந்தனர். 39 பேர் காயம் அடைந்தனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

சுமார் 3 மணி நேரம் இந்த சண்டை நடந்ததாகவும், கையெறி குண்டு வீசி தாக்கியதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

ஹோண்டுராஸ் நாட்டில் 2019ஆம் ஆண்டில் இருந்து சிறைச்சாலைகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. சிறைச்சாலைகளில் இரண்டு முக்கிய தாதா கும்பல்களுக்கு இடையே அடிக்கடி மோதல் ஏற்படுகிறது. இதுதவிர குற்றச்செயல்களில் ஈடுபடும் கும்பல்களும் மோதிக்கொள்கின்றன. இதனால் ஏராளமான வீரர்கள் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இதையும் மீறி அவ்வப்போது மோதல்கள் ஏற்படுகின்றன.

ஹோண்டுராஸ் நாட்ல் 25 சிறைச்சாலைகளில் அளவுக்கு மீறி கைதிகள் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் எனவும், கைதிகளுக்கு சரியான உணவு, சுகாதார வசதிகள் இல்லை என்றும் மனித உரிமைகள் அமைப்பினர் குற்றம்சாட்டுகின்றனர்.

# ஐ.நா. பொதுச்செயலாளாகிறார் மீண்டும் ஆன்டனியோ குட்டரெஸ்



ஐக்கிய நாடுகள் சபையின் 9ஆவது பொதுச்செயலாளராக போர்த்துக்கல் முன்னாள் பிரதமரான ஆன்டனியோ-குட்டரெஸ் (72) கடந்த 2017ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம்திகதி முதல் பதவி வகித்து வருகிறார். இவரது பதவிக் காலம் இந்த ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதியுடன் நிறைவடையும் நிலையில், ஐ.நா.வின் அடுத்த பொதுச்செயலாளரை தேர்வு செய்யும் பணிகள் நடந்தன.

சமீபத்தில் நடந்த ஐ.நாவின் அதிகாரம் மிகுந்த பாதுகாப்பு கவுன்ஷில் கூட்டத்தில் ஆன்டனியோ குட்டரெஸையே மீண்டும் பொதுச் செயலாளராக்குவது என ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், ஐ.நாவின் பொதுச்சபை கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில் ஆன்டனியோ குட்டரெஸ் ஐ.நா.சபை பொது செயலாளராக மீண்டும் தேர்வு செய்யப்பட்டார்.

அவரது பதவிக்காலம் அடுத்த ஆண்டு ஜனவரி 1 முதல் 2026 ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி வரை தொடரும்.

# புதிய வகை உருமாற்றம் ஏற்பட்ட வைரஸ் 29 நாடுகளில் பரவியிருப்பது கண்டுபிடிப்பு!

புதிய வகை உருமாற்றம் ஏற்பட்ட கொரோனா வைரஸை 29 நாடுகளில் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள் ளனர்.

இவற்றை வேரியன்ட் ஆப் இன்ட்ரஸ்ட் என்று பெயரிட்டு அழைக் கின்றனர். முதன் முதலாகப் பெரு நாட்டில் இந்த வகை கொரோனா கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் காணப்பட்டது.

தற்போது அதுலத்தின் அமெரிக்கா, அர்ஜென்டினா, சிலி உள்ளிட்ட 29 நாடுகளுக்குப் பரவியுள்ளது. இந்தியாவில் அடையாளம் காணப் பட்ட டெல்டா வகை கொரோனாவை கையாள் வதில் பல்வேறு நாடுகள் கவனம் செலுத்தி வருகின்றன. இந்நிலையில் மற்றொரு புதிய வகை கொரோனா வைரஸை உலக சுகாதார அமைப்பு அடையாளம் காட்டியுள்ளது. அந்த வைரஸின் தன்மை குறித்து ஆய்வு நடைபெற்று வருகிறது.





# தியான்ஹே அமைப்பை சென்றடைந்த வீரர்கள்

சீனா விண்வெளிக்கு அனுப்பிய மூன்று வீரர்களும், தியான் ஹே என்ற அமைப்புக் குள் பத்திரமாக நுழைந்தனர்.

இவர்கள் அடுத்த மூன்று மாதங்கள் அங்கிருந்து ஆராய்ச்சி மையத்தை விரிவாக்கும் பணிகளில் ஈடுபட வுள்ளனர்.

பூமியில் இருந்து 380 கிலோ மீற்றர் தொலைவில், பிரத்யேக விண்வெளி மையத்தை அமைத்துவரும் சீனா, அதற்கான பணிகளுக்காக முதற்கட்டமாக 3 விண் வெளிவீரர்களை அனுப்பியது. 2022 ஆம் ஆண்டு இறுதிக்குள் விண்வெளிமையத்தை செயல்பாட்டுக்கு கொண்டுவர சீனா திட்டமிட்டுள்ளது.

# ரன்வேயில் சறுக்கிச்சென்று விபத்தை சந்தித்த விமானம்




இங்கிலாந்து தலைநகர் லண்டனில் உள்ள ஹீத்ரோ சர்வதேச விமான நிலையத்தில் பிரிட்டிஷ் ஏர்வேஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான போயிங் 787 ரக ரீம் லைனர் சரக்கு விமானம் இன்று தரையிறங்கியது.

அதன்பின், அந்த விமானம் வழக்கமாக நிறுத்தப்படும் இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

அப்போது முன் சக்கரத்தின் லேண்டிங் கியரை பொறியாளர் சரியாக லாக் செய்யாமல் விட்டதால் விமானத்தின் மூக்குப் பகுதி தரையில் மோதியது.

அதே நேரத்தில் விமானத்துடன் இணைக்கப்பட்டிருந்த படிக்கட்டுகள் இடித்ததில் வாசல் பகுதியும் சேதமடைந்தது.

இந்த விபத்தில் விமான ஊழியர்கள் இருவர் காயமடைந்த நிலையில், அதில் ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஊரடங்கை நீடிப்பது தொடர்பாக தமிழக முதல்வர் ஆலோசனை



தமிழகத்தில் கடந்த மே 7 ஆம் திகதி புதிய அரசு பதவி ஏற்றபோது கொரோனாத் தொற்றுப் பரவல் தொடர்ச்சியாக அதிகரித்தது.

கொரோனா பாதித்தவர்களின் எண்ணிக்கை நாள் ஒன்றிற்கு 36 ஆயிரத்தை கடந்தது. அதைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் மே 10 ஆம் திகதி முதல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது. இருப்பினும், கொரோனாத் தாக்கம் குறையாத நிலையில், முழு ஊரடங்கு உத்தரவை அமல் படுத்தும்படி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார்.

அதன்படி மே 24 ஆம் திகதி முதல் ஜூன் 7 வரை முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது.

அதன் பின்னர் பொதுமக்களின் தேவைகள் கருதி சில தளர்வுகளைத் தமிழக அரசு அறிவித்து வருகிறது. 11 மாவட்டங்களைத் தவிர்த்து, மற்ற 27 மாவட்டங்களிலும் பல்வேறு தளர்வுகளுடன் 21 ஆம் திகதி வரை நான்காவது கட்டமாக ஊரடங்கு அமுல் படுத்தப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது.

இந்த ஊரடங்கு 21 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ள நிலையில், ஐந்தாவது கட்டமாக ஊரடங்கை நீடிப்பது தொடர்பாகவும் அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாகவும் எந்தெந்த மாவட்டங்களுக்குக் கூடுதலாக தளர்வுகள் வழங்குவது என்பது தொடர்பாகவும் சென்னை தலைமைச் செயலகத்தில் மருத்துவ வல்லுநர்கள் மற்றும் சுகாதாரத் துறை அதிகாரிகளுடன் தமிழ் நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று ஆலோசனை மேற்கொள்கிறார்.



# 'பப்ஜி மதன்' தருமபுரியில் கைது

பப்ஜி விளையாட்டை ஆபாசமாக பேசி யூடியூப்பில் வெளியிட்ட வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு தேடப்பட்டு வந்த மதன் என்ற நபர் தருமபுரியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர் என தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த வழக்கில், குறித்த யூடியூப் தளத்தின் நிர்வாகியாக செயல்பட்ட மதனின் மனைவி கிருத்திகாவை மத்திய குற்றப்பிரிவு காவல்துறையினர் கைது செய்து நடத்திய விசாரணையில் மதனின் இருப்பிடங்கள் பற்றிய தகவல்கள் கிடைத்தன எனக் கூறப்படுகிறது.

பப்ஜி விளையாட்டை ஆபாசமாக பேசி ஒளிபரப்புவதன் மூலம் இளையவர்களை ஈர்த்து, மாதந்தோறும் 10 லட்சம் ரூபா வரை இவர்கள் சம்பாதித்தனர் என, 3 சொகுசுக் கார்கள், 2 சொகுசு பங்களாக்களை வாங்கியிருப்பதும் இன்னும் சில பெரிய சொத்துக்களுக்கு உரிமையாளராகியிருப்பது தெரியவந்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

18 வயதுக்குக் குறைந்த சிறுவர்களை இந்த தளத்தின் மூலம் ஏமாற்றி பணமோசடி செய்ததாக்கள் என பல குற்றச்சாட்டுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அவற்றினடிப்படையில் விசாரணைகள் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ராமர் கோயிலுக்கு நிலம் வாங்கியதில் ஊழல்

## பிரியங்கா காந்தியும் கடும் விமர்சனம்



அயோத்தியில் அதிக விலைக்கு நிலம் வாங்கிய விவகாரத்தில் 'கடவுளின் பெயரில் ஊழல் நடப்பது கோடிக்கணக்கான மக்களின் நம்பிக்கை மீது நடத்தப்பட்ட தாக்குதல்' என காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி விமர்சித்துள்ளார்.

அயோத்தியில் ராமர் கோயிலுக்காக வாங்கப்பட்ட நிலத்தில் ஊழல் புகார் எழுந்துள்ளது. கடந்த மார்ச்சில் 2 கோடி ரூபா விலையில் வாங்கப்பட்ட 1.208 ஹெக்டேயர் நிலம், அடுத்த சில நிமிடங்களில் அறக்கட்டளைக்கு 18.5 கோடிக்கு விற்கப்பட்டதாகவும், பெரும் ஊழல் நடைபெற்றிருப்பதாகவும் சமாஜ்வாதி, ஆம் ஆத்மி கட்சியினர் புகார் தெரிவித்தனர். இந்த விடயத்தை காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டோர் கடுமையாக விமர்சித்திருந்தனர்.

'அயோத்தியில் அதிக விலைக்கு நிலம் வாங்கியது தொடர்பான ஊழல் புகார் குறித்து உச்சநீதிமன்றத்தின் கண்காணிப்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும்!' என காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலர் பிரியங்காகாந்தியும் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக பிரியங்கா வெளியிட்டுள்ள அறிக்கையில், 'அந்தப் பகுதியில் நிலத்தின் விலை அதிகபட்சம் 5 கோடிதான் இருக்கும். கடவுள் நம்பிக்கையின் பெயரில் ஊழல் செய்வது கோடிக்கணக்கானோரின் நம்பிக்கை மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஆகும். இந்த நில ஊழல் குறித்து உச்ச நீதிமன்றத்தின் கண்காணிப்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும்!' என்று தெரிவித்துள்ளார்.

# இந்தியாவின் தடகளவீரர் மில்காசிங் காலமானார்



தற்போது பாகிஸ்தானின் பகுதியாக இருக்கும் கோபிந்த்புரா பகுதியில் 1928 ஆம் ஆண்டு நவம்பர் 30 இல் பிறந்தவர் மில்கா சிங். இந்தியா சுதந்திரமடைந்தபோது ஏற்பட்ட பிரிவினையில் இந்தியாவுக்கு வந்த வர் மில்கா சிங். 1960 ஆம் ஆண்டு ரோம் நகரில் நடை பெற்ற ஒலிம்பிக் 400 மீற்றருக்கான ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொண்டு 4 ஆவது இடத்தைப் பிடித்தார். அவர், 1956, 1964 ஆகிய ஆண்டுகளிலும் இந்தியாவுக்காக ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொண்டிருந்தார்.

1958 ஆம் ஆண்டு நடைபெற்ற கொமன் வெல்த் போட்டியில் தங்கம் வென்றதன் மூலம் முதல் தங்கம் வென்ற இந்தியர் என்ற சாதனையைப் படைத்தார். அந்தச் சாதனை 50 ஆண்டுகளுக்கு நீடித்தது.

2010 ஆம் ஆண்டு வட்டு எறிதல் போட்டியில் கிருஷ்ணா பூனியா தங்கம் வென்றதன் மூலம் அந்தச் சாதனை முறியடிக்கப்பட்டது. மில்கா சிங், ஆசியப் போட்டிகளிலும் கலந்துகொண்டு 4 தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ளார். இதன்மூலம் இந்தியாவின் பறக்கும் சீக்கியர் என அன்போடு அழைக்கப்பட்டார். அவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கி இந்திய அரசு கௌரவித்துள்ளது.

மில்காசிங் மறைவுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர், பிரதமர் மோடி, விளையாட்டு வீரர்கள் உள்ளிட்டோர் தமது இரங்கல்களைத் தெரிவித்துள்ளனர்.

# இரகசிய அறை அடையாளம் கண்டறியப்பட்டது ஆசிரியை கைது; சிவசங்கர் பாபாவுக்கு மாரடைப்பு



சென்னை கேளம்பாக்கத்தில் உள்ள சுஷில் ஹரி பாடசாலையின் நிறுவுனரான சாமியார் சிவசங்கர் பாபா, மாணவிகளைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த வழக்குகளில் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாணவிகளுக்கு பாலியல் துன்புறுத்தல்களைச் செய்வதற்கு பயன்படுத்திய இரகசிய அறையை அவர் நேற்று அடையாளம் காட்டியிருந்த நிலையில், இன்று சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் ஆசிரமத்தில் நேரில் விசாரணை மேற்கொண்டனர். அவரின் இரகசிய அறைக்கு சீல் வைத்த பொலிஸார், அவருக்கு உதவியாக இருந்த மூன்று ஆசிரியைகளை விசாரணைக்காக சென்னைக்கு அழைத்து வந்துள்ளனர்.

அவர்களிடம் நடத்திய விசாரணையின்போது, அவர்களில் ஒருவரான சுஷ்மிதா என்ற ஆசிரியையை அவர்கள் கைது செய்தனர். சுஷ்மிதாதான் சிவசங்கர் பாபாவிற்கு தனிப்பட்ட உதவியாளராக இருந்துள்ளார் என்றும் மாணவிகளை சிவசங்கரின் அறைக்கு மூளைச் சலவை செய்து அழைத்து வருவது அவரது வேலையாக இருந்ததும் விசாரணையில் தெரியவந்துள்ளது. மேலும், நீரஜ் மற்றும் கருணா என்ற இரு ஆசிரியைகளிடமும் விசாரணை தொடர்ந்து நடந்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

இதற்கிடையே சிறையில் அடைக்கப்பட்டிருந்த சிவசங்கர் பாபாவிற்கு நேற்று மாரடைப்பு ஏற்பட்டதாகவும், அவர் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்துவரப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. சிவசங்கர் பாபாவின் சீல்வைக்கப்பட்ட இரகசிய அறையை விரைவில் பொலி ஸார் திறந்து விசாரணை நடத்த உள்ளனர் எனவும் அதில் பல முக்கிய தகவல்கள் கண்டறியப்படலாம், ஆதாரங்கள் கிடைக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# பசளை மற்றும் கிருமிநாசினிகள் தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## அம்பாறை மாவட்ட விவசாயிகள் கோரிக்கை

விவசாய செய்கைக்கான பசளை மற்றும் கிருமிநாசினிகள் தொடர்பில் அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்தி தம்மைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அம்பாறை மாவட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில் சேதனப்பசளை அம்பாறை மாவட்ட விவசாய நிலங்களுக்கு அதிகம் பொருந்தாது. அவ்வாறு பாவிப்பதாலும் இரசாயனப்பசளையோடு கலந்து படிப்படியாகவே நிலத்தை சேதனப்பசளை மூலம் வளப்படுத்தி பாவனையினை அதிகரிக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

அம்பாறை மாவட்ட விவசாயிகள் தற்போது எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு கூறினர். அம்பாறை மாவட்டம் ஆலையடி வேம்பு பிரதேச விவசாயிகள் 2021 சிறு போகத்தில் உரம், களை நாசினி, கிருமி நாசினி தட்டுப்பாட்டினால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். காலா காலமாக யூரியா பசளை போட்டு விவசாயம் செய்து வந்த எங்களுக்கு எங்க ளது நிலத்துக்கு சேதன பசளை சரிவராது யூரியா பசளையே தேவை எனவும் கூறுகின்றனர்.

2021 சிறுபோகத்தில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட இரசாயன மானிய உரம் தந்த போதும் அது தங்களுக்கு போதுமானதாக இல்லை எனவும் சேதன பசளையும் முறையாக கிடைப்பதில்லை என்பதோடு அதை பாவித்து பார்க்கையில் சேதனப்பசளைக்கு வளர்ச்சி போதாமல் குன்றிக்காணப்படுவதாகவும் விவசாயிகள் கவலை வெளியிட்டனர்.

இதேநேரம் வழமையாக தேவைப்படும் உரத்தை வெளிச்சந்தைகளில் வர்த்தகர்களிடம் இருந்து பணம் செலுத்தி பெற்று வந்தோம் எனவும் இப்போகத்தில் சேதனப்பசளை பாவிக்க வேண்டும் என அரசாங்கம் அறிவித்ததால் இரசாயனப் பசளைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அளவுக்கு வர்த்தகர்கள் உரத்தை பதுக்கி வைத்துள்ளோம் எனவும் குறிப்பிட்டனர்.

மேலும் 1,500 ரூபாவுக்கு விற்கவேண்டிய 50 கிலோ உரப்பையை 5 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்கின்றனர் எனவும் இதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து பசளை ,கிருமி நாசினிகளை விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர்.

தற்போது நெற்செய்கையில் அறக்கொட்டி நோய், மஞ்சள் நிற நோய் போன்ற நோய்த் தாக்கங்கள் ஏற்பட்டு இலைகள் சிவந்து வைக்கோல் நிறத்துக்கு மாறி வருவதாகவும் அதற்குரிய நாசினி களை பெறுவதும் கடினமாக உள்ளதாக தெரிவித்தனர். நாசினிகளுக்கான தட்டுப்பாடு மற்றும் தேடிப் பெற இயலாத நிலமை காரணமாக கூடிய விலைக்கு விற்பனை செய்கின்றனர். இப்படியான நிலையால் விவசா யிகள் வெகுவாகப் பாதிக்கின்றனர் எனவும் தெரிவிக்கின்றனர்.

## கிரான்குளம் கடற்கரை பகுதியில் கரையொதுங்கிய கடல் ஆமைகள்


மட்டக்களப்பு கிரான்குளம் கடற்கரை பகுதியில் இன்று அதிகாலை உயிரிழந்த நிலையில் 3 கடல் ஆமைகள் உட்பட 1 டொல்பின் மீனும் கரையொதுங்கியுள்ளன.

இன்னும் பல ஆமைகள் கடலில் உயிரிழந்த படி மிதந்து வருகின்றன என இன்று கடல் தொழிலுக்குச் சென்று திரும்பிய மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 21 ஆம் திகதி எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பலில் தீ பரவியதிலிருந்து இதுவரை 40 இற்கும் மேற்பட்ட கடலாமைகளின் உடல்களும் 05 டொல்பின்களின் உடல்களும் கரையொதுங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. கடற்றொழில் நீரியல்வள திணைக்கள அதிகாரிகள், கடல் சுழல் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர்கள், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் உட்பட்ட அதிகாரிகள் பார் வையிட்டதுடன், இறந்த நிலையில் கரையொதுங்கிய டொல்பின் உள்ளிட்ட கடலாமைகளை பகுப்பாய்விற்காக வன ஜீவ ராசிகள் திணைக்கள அதிகாரிகள் கொண்டு செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## அனுமதிப் பத்திரமின்றி இயங்கி வந்த மருந்தகத்தில் போதையூட்டும் மாத்திரைகள்



காத்தான்குடியில், அனுமதிப் பத்திரமின்றி இயங்கி வந்த மருந்தகமொன்றை, விசேட அதிரடிப் படையினர், நேற்று வெள்ளிக்கிழமை இரவுதிடீரெனசுற்றிவளைத்து தேடுதல் நடத்தியுள்ளனர்.

அந்த தேடுதலின் போது, அந்த மருந்தகத்திலிருந்து போதையூட்டக்கூடிய, மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன், மருந்தக உரிமையாளரும் மற்றுமொருவருமென இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவபுலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலையடுத்து, களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப் படையினரின் உதவியுடன் குறித்த மருந்தகம் முற்றுகையிடப்பட்டு, சுற்றிவளைத்து தேடுதலுக்கு உட்படுத்தப் பட்டது.

அத்துடன், வைத்தியர்களினால் மருந்து துண்டு இல்லாமல் மருந்துகள் வழங்கப்பட்டு வந்தமையும் ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகசுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்

இதன் போது உணவு மற்றும் மருந்தக பரிசோதகர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் காத்தான் குடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. எல். எம். நபீல், காத்தான்குடி மேற்பார்வைபொதுச்சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம். பஷீர் ஆகியோர் அங்கு சென்று விசாரணைகளை மேற் கொண்டனர்.

மருந்தகத்துக்கு சீல் வைக்கப்பட்டதுடன், கைது செய்யப்பட்ட இருவரையும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.



## விதுஷனின் உடலை தோண்டுமாறு மட்டக்களப்பு நீதிமன்றம் உத்தரவு

மட்டக்களப்பு இருதயபுரம் கிழக்கு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த் 3 ஆம் திகதி புலனாய்வுப்பிரிவினர் எனக் கூறி வந்தவர்களினால் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்ட இளைஞன் ஒருவர் சடலமாக கண்டெடுக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றிருந்தது.

இந்த சம்பவம் தொடர்பில் உயிரிழந்த சந்திரன் விதுஷன் எனும் இளைஞனின்சடலத்தினை தோண்டியெடுத்து இலங்கையிலேயே சிறந்த நிபுணத்துவம் வாய்ந்த பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் முன்னிலையில் மீள் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த 3 ஆம் திகதி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி ஏ.இளங்கோவன் தலைமையிலான சட்டவைத்தியர்களினால் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கையில் குறித்த இளைஞன் அதிகளவான ஐஸ் போதைப் பொருள் பைகளை வாயில் போட்டு விழுங்கியதன் காரணமாக உயிரிழந்துள்ளார் என பிரேத பரிசோதனை அறிக்கையில் வெளியானது என்பதை பொலிஸார் உறுதிப்படுத்தியிருந்தனர்.

இவரின் மரணம் தொடர்பான வழக்கில் மரணமானவரின் குடும்பத்தினர் சாட்சியம் அளிக்கையில் தங்களின் மகனின் பிரேத பிரிசோதயில் சந்தேகம் இருப்பதாக அதற்கான நீதி கிடைக்கவேண்டும் என்று தெரிவித்திருந்தனர். குறித்த வழக்கானது நேற்று கொரோனா அச்சுறுத்தல் காரண மாக நீதிபதியின் அறையில் நீதிமன்ற நீதிவான் ஏ.சி.றிஸ்வான் அவர்களின் முன்நிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

புதைக்கப்பட்ட விதுஷனின் உடலை வருகின்ற திங்கட்கிழமை தோண்டி எடுத்து இலங்கையில் மிகவும் அனுபவம் வாய்ந்த பேராதனை பல்கலைக்கழகத்தினுடைய பேராசிரியர் அவர்களின் தலைமையில் பிரேத பரிசோதனை செய்ய நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## 18 வர்த்தக நிலையங்களுக்கு சீல்

பயணத்தடையை மீறி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட 18 வர்த்தக நிலையங்களுக்கு தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் சீல் வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று மட்டக்களப்பு காத்தான்குடி நகரில் இடம் பெற்றது.

காத்தான்குடி பிரதான வீதி உட்பட உள் வீதிகளிலும் பொலிஸார் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், இராணுவத்தினர் நகர சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில், பயணத்தடையை மீறி வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 18 வர்த்தக நிலையங்களுக்கு சீல் வைக்கப்பட்டது.

காத்தான்குடி பொலிஸ் நிலைய சப் இன்ஸ்பெக்டர் எம் .எம். ஜவாகிர் சுகாதார வைத்தியதிகாரி பணிமனை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ராணுவத்தினர், நகர சபை உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் உட்பட பலரும் இந் நடவடிக்கையில் பங்கு கொண்டிருந்தனர்.

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு







## யூரோ கிண்ணக் கால்பந்துத் தொடர்

# நெதர்லாந்து, உக்ரைன் அணிகள் வெற்றி!

ஆம்ஸ்ரடாமில் நடைபெற்ற யூரோ கிண்ணக் கால்பந்துத்தொடர்போட்டியெல் ஒஸ்திரியா அணியை 2-0 என்று வீழ்த்திய நெதர்லாந்து அணி, 13 ஆண்டுகளுக்குப் பிறகு யூரோ கோப்பை இறுதி 16 அணிகள் கொண்ட நொக் அவுட் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆட்டத்தின் 11 ஆவது நிமிடத்தில் பெனால்டி கிக் வாய்ப்பை மெம்பிஸ் டீபே கோலாக மாற்றினார், பிறகு 67 ஆவது நிமிடத்தில் டெம்செல் டம்பிரைஸ் 2 ஆவது கோலை அடிக்க ஒஸ்திரியா அணியை நெதர்லாந்து 2-0 என்று வென்றது.

உக்ரைன் அணிக்கு எதிராக இன்னும் ஒரு போட்டி ஒஸ்திரியாவுக்கு இருப்பதால் இறுதி 16 க்குள் நுழையும் வாய்ப்பு ஒஸ்திரியாவுக்கும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

புகாரெஸ்ட்டில் நேற்று நடைபெற்ற பிரிவு சி போட்டியில் வட மசிடோனியா பெரும்பாலும் ஆதிக்கம் செலுத்தினாலும் உக்ரைன் அணி அதைவிடவும் அபாரமாக ஆடி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று புள்ளிகள் கணக்கைத் தொடங்கியது.

உக்ரைன் வீரர்கள் அன்ட்ரே யார்மலெங்கோ மற்றும் ரோமன் யரேம்சுக் ஆகியோர் முறையே 29 மற்றும் 34 ஆவது நிமிடங்களில் இடைவேளைக்கு முன்னரே அடித்த கோல்கள் உக்ரைனுக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுத்தன. ஆட்டத்தின் 57வது நிமிடத்தில் வட மசிடோனியா வீரர் அலியோஸ்கி தமது அணிக்கான ஒரே கோலை அடித்திருந்தார்.



## ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி இரண்டாவது நாளில் ஆரம்பமானது

ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இந்திய - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டி இன்று ஆரம்பமாகியுள்ளது. சொளத் தாம்படனில் நேற்றுக் காலை ஆரம்பமாகவிருந்த இந்தப் போட்டியின் முதல்நாள் ஆட்டம் மழையினால் முழுவதுமாகக் கைவிடப்பட நேர்ந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றநியூசிலாந்து அணித்தலைவர் கேன் வில்லியம்சன், இந்தியாவைத் துடுப்பெடுத்தாட அழைத்திருந்தார். இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக ரோஹித் சர்மாவும், சுப்மன் கில்லும் களமிறங்கியுள்ளனர்.

## ஒலிம்பிக் போட்டிக்கான பிரேஸில் அணி அறிவிப்பு

### டானி அல்வ்ஸ் தலைவர்: நெய்மருக்கு இடமில்லை



டோக்யோ ஒலிம்பிக் போட்டிக்கான பிரேஸில் கால்பந்தாட்ட அணி அறிவிக்கப்பட்டுள்ளது. தற்பொதைய ஒலிம்பிக் சம்பியனான பிரேஸில் அணியின் கப்டனாக பின்கள வீரரான 38 வயது டானி அல்வ்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

முழங்கால் காயத்தால் கோபா அமெரிக்கா தொடரில் விளையாடாத அவருக்கு கப்டன் பொறுப்பு கிடைத்துள்ளது பிரேஸில் கால்பந்தாட்ட ரசிகர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. 31 வயதான கோல்காப்பாளர் சான்டோஸ், 28 வயது பின்கள வீரர் டியாகோ கார்லோஸ் ஆகியோரும் அணியில் இடம் பெற்றுள்ளனர். நட்சத்திர வீரரான 29 வயது நெய்மருக்கு அணியில் இடம் கிடைக்கவில்லை. ஒலிம்பிக் போட்டிக்கான கால்பந்தாட்ட அணியில் அணியில் 3 வீரர்கள் மட்டுமே 23 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பது விதிமுறையாகும். இதனால் நெய்மருக்கு அணியில் இடம் கிடைக்கவில்லை என்று தெரிகிறது.

## இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட் போட்டி தோல்வியைத் தவிர்க்கப் போராடுகிறது இந்தியா

இந்தியா - இங்கிலாந்து மகளிர் அணிகளுக்கு இடையிலான ஒரே ஒரு டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நான்காவதும் இறுதியுமான நாளின் ஆட்டம் இன்று நடைபெறுகிறது. இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து தனது முதல் இன்னிங்சிஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து 396 ஓட்டங்களை எடுத்த நிலையில் தனது இன்னிங்ஸை இடைநிறுத்திக்கொண்டது.

அடுத்து தனது இன்னிங்ஸை தொடங்கிய இந்தியா, தனது முதல் இன்னிங்ஸில் 231 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இந்திய அணியில் டெஸ்ட் அறிமுகத்தை மேற்கொண்ட 17 வயது வீராங்கனை ஃபாலி வர்மா 13 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 96 ரன்கள் சேர்த்த நிலையில் சதத்தைத் தவறவிட்டு ஆட்டமிழந்தார். ஸ்மிருதி மந்தனா 78 ஓட்டங்களை எடுத்தார். இங்கிலாந்து அணியின் சோஃபி எக்லெஸ்டோன் 4, ஹீதா நைட் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.



165 ஓட்டங்கள் பின்னிலையிலிருந்த இந்திய அணியை பொஃலோ ஒன் அடிப்படையில் மீண்டும் துடுப்பெடுத்தாடப் பணித்தது இங்கிலாந்து. இந்திய மகளிர் அணி, இன்றைய ஆட்டம் ஆரம்பித்த போது ஒரு விக்கெட்டை இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றி ருந்தது. முதல் இன்னிங்ஸைப் போலவே அபாரமாகத்துடுப்பெடுத்தாடிவரும் ஃபாலிவர்மா, ஆட்டமிழக்காது 57 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

## அயர்லாந்து வீரர் கெவின் ஓ பிரையன் ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றார்

அயர்லாந்து கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் கெவின் ஓ பிரையன் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணிக்கு எதிராக 2006 இல் அறிமுகமான கெவின், இதுவரை 153 ஒருநாள் போட்டிகளில் விளையாடி போட்டியொன்றில் அதிகபட்ச ஓட்டமாக 142 ஐ உள்ளடக்கி, 3,619 ஓட்டங்களைச் சேர்த்துள்ளார். அத்தோடு 114 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியுள்ளார்.

37 வயதுடைய கெவின் ஓபிரையன் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றாலும், சர்வதேச ரி-20 போட்டிகளில் தொடர்ந்து விளையாடப் போவதாகத் தெரிவித்துள்ளார்



# அரசின் ஒரு லட்சம் வேலைவாய்ப்புகளில் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் நியமனம்!

## விதிகளுக்கு முறைகேடான நியமனத்தை ஏற்கோம் அழுத்தம் பிரயோகித்தால் நீதிமன்றம் செல்வோம்



## வலி.கிழக்கு தவிசாளர் நிரோஷ் காட்டம்

(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,ஜூன் 18

உள்ளூராட்சி மன்றங்களால் நியமிக்கப்படும் அட்டவணைப்படுத்தப்படாத ஆளணியை பல்பணி அபிவிருத்திச் செயலணி திணைக்களம் ஊடாக நிரப்ப முயற்சிக்கப்படுவதை வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை நிராகரித்துள்ளதுடன் தொடர் அழுத்தம் காணப்பட்டால் நீதிமன்றம் செல்லவும் முடிவெடுத்துள்ளோம் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

வடக்கு மாகாண திணைக்களங்களில் ஒரு லட்சம் வேலைவாய்ப்பில் பயிற்சி பெற்ற 105 பேரை ஆரம்ப நிலை சேவை தேவையின் நிமித்தம் தற்காலிக அடிப்படையில் உள்வாங்குவதற்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு பிரதம செயலாளர் கடிதம் மூலம் அறிவித்திருந்தார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் 40 பயிலுநர்களை முதற்கட்டமாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு பகிர்ந்தளித்துள்ளது. இது தொடர்பில், யாழ். மாநகர சபை கடிதம் ஒன்று அனுப்பப்பட்டு அதன் பிரதிகள் ஏனைய பிரதேச சபைகளுக்கும் முகவரியிடப்பட்டிருந்தன. இந் நிலையில் நியமனக் கடிதங்கள் எதுவும் அற்ற நிலையில் குறித்த பயிலுநர்கள் பிரதேச சபைகளுக்கு அனுப்பப்பட்டதுடன் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைக்கு மூன்று பயிலுநர்கள் அனுப்பப்பட்டனர்.

இதனையடுத்து, வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் பிரதேச சபையின் கூட்டத்தைக் கூட்டினார்.

அந்தக் கூட்டத்தில் தவிசாளார், உள்ளூராட்சி மன்றங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்படாத ஆளணி நியமனங்களை மத்திய அரசின் தாபனங்கள் அரசியல் காரணங்களுக்காகக் கையாள்வதை ஏற்றுக்கொள்ளமுடியாது. ஆளணி நியமனம் தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்களால் ஏற்கனவே பகிரப்பட்டு கேள்விக்கு இடமின்றி அதிகாரம் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளது. அதனைத் தற்போது கேள்விக்குட்படுத்துகின்றனர். எமது சபைகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு பகுதி பகுதியாக நாம் உரிய அனுமதிகளைப் பெற்று நேர்முகத் தேர்வுகளை நடத்தி தெரிவு செய்யப்பட்டவர்களது பெயர் விவரங்களையும் பகிரங்கப்படுத்தி விட்டோம். ஆனால் அந் நியமனங்களுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி தேவை என வடக்கு மாகாண சபை கருதியமையால் அங்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. நியமனத்திற்குத் தெரிவானவர்கள் நியமனத்தை விரைவுபடுத்த மனித உரிமை ஆணைக்குழுவைக் கோரியுள்ளனர்.

எனினும் அது அரசாங்கத்தின் அனைத்து ஆட்சேர்ப்புக்களையும் தற்காலிகமாக நிறுத்துதல் என்ற காரணத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. எமது சபைகளில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை உரியவாறு நிரப்ப முடியாமை காரணமாக நாம் வெளிவாரியாக சனசமூக நிலையங்கள் ஊடாகப் பணியாளர்களைப் பெற்றே மக்களுக்கு சேவை ஆற்றுகின்றோம். இவ்வாறாக சபைகளில் பலர் வருடக்கணக்கில் கடின பணியை ஆற்றி வருகின்றனர். அவ்வாறு பணியாற்றுபவர்களுக்கு நேர்முகத்தேர்வில் கூட 10 புள்ளிகள் வழங்குகின்றோம்.

இவர்களின் நியமனங்களை அரசாங்கம் ஏற்பதை விடுத்து, புதிதாக முறையற்ற நியமனங்களை மேற்கொள்வதை நாம் மறுக்கின்றோம். புதிதாக வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படுவதை நாம் வரவேற்கின்றோம். ஆனால் அந் நியமனங்கள் எமது சபையின் அதிகாரங்களை மீறாத வகையில் கடந்த காலத்தில் எமது சபைக்காக பணியாற்றுபவர்களை தூக்கி வீசாத வகையில் அமைய வேண்டும்

ஏற்கனவே நிதி அமைச்சு ஆரம்ப நிலைசேவை வகுப்பிற்குத் தேவையான பணியாளர்களை பல்பணி அபிவிருத்திச் செயலணி வாயிலாக நியமிக்க கடந்த ஆண்டு சுற்றிக்கை வெளியிட்டிருந்தபோதும் அது உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஏற்றது என சபை கருதவில்லை. எம் மீது தொடர் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டால் நீதிமன்றம் செல்லவேண்டியேற்படும் எனவும் தவிசாளரால் எடுத்துரைக்கப்பட்டது.

இந் நிலையில் ஆளணியை நிரப்புதல் தொடர்பாக நேர்முகத்தேர்வுகள் இடம்பெற்றுள்ள நிலையில் புதிதாக அனுப்பப்பட்டுள்ள குறித்த பயிலுனர்களை அனுமதிப்பதில்லை. நாம் ஏற்கனவே நேர்முகத் தேர்வுகளை நடத்தியிருக்கும் நியமனத்திற்கு முன்னுரிமை அளித்து நடவடிக்கை எடுக்க தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும் உள்ளூராட்சி மன்றத்திற்குப் பகிரப்பட்டு இதுவரைகாலமும் தடையின்றி பிரயோகிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்படாத நியமனங்களின் அதிகாரத்தை உள்ளூராட்சி மன்றங்கள் பிரயோகிக்க இடமளிக்கப்படவேண்டும் எனவும் இல்லையேல் பொருத்தமான நீதிமன்றத்தை நாடவும் முடிவு எடுக்கப்பட்டது. இந்தத் தீர்மானங்களுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் தவிர்ந்த சகல கட்சிகளும் ஏகமனதாக அங்கீகாரமளித்தனர்.

# கிளிநொச்சி கரும்புத் தோட்ட காணியில் உடன் விவசாய நடவடிக்கைக்கு ஏற்பாடு



(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,ஜூன் 19

கிளிநொச்சி, அக்கராயன் பிரதேசத்தில் அமைந்துள்ள கரும்புத் தோட்டக் காணியில் உடனடியாக விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மணல் அகழ்வதற்கான அனுமதிகளை வழங்குவதன் மூலம் சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில், மாவட்ட செயலகத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே, குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

கரும்பு தோட்டமாக அடையாளப்படுத்தப்படுகின்ற சுமார் 196 ஏக்கர் விஸ்தீரனமான நிலப்பரப்பு, நீண்ட காலமாக சரியான பராமரிப்பு இன்றிக் காணப்படுகின்றது. குறித்த காணியில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த சமூக அமைப்புக்கள் ஆர்வம் வெளியிட்டிருந்தன.

இந்நிலையில், நேற்றைய கூட்டத்தில் அது தொடர்பாக ஆராய்ந்து தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில், குறித்த காணிகளில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள விரும்புகின்றவர்கள் தேவையான அனுமதிகளைப் பெற்று உடனடியாக சிறுபோக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா -

இந்தப் பிரதேசத்தில் முழுமையாக கரும்புத் தோட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாக இருக்கின்ற போதிலும், உடனடியாக அதனை நடைமுறைப்படுத்துவதில் நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன.

எனவே, உப உணவுப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதுடன் படிப்படியாக கரும்புப் செய்கை அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, மாவட்டத்தில் மணல் அகழ்வதற்குப் பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்து, தேவையானளவு அனுமதிகளை விரும்புகின்றவர்களுக்கு வழங்குவதன் மூலம் சட்ட விரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்த முடியும் என்ற அடிப்படையில், ஒரு வார காலப் பகுதிக்குள் குறித்த அனுமதிகளை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கூட்டமைப்பை நம்பவைத்து கழுத்தறுத்தார் கோட்டாபய!

## சஜித் அணி சாடல்

'கடந்த காலத்தில் பல தடவைகள் கூட்டமைப்பை பேச்சுக்கு அழைத்து ஏமாற்றியவர்கள்தான் ராஜபக்ஷாக்கள். இப்போது பேச்சு என்று அறிவித்துவிட்டு அதனை நடத்தாமலேயே ஒத்தி வைத்துள்ளனர்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

'ராஜபக்ஷ அரசு புதிய அரசமைப்பை ஒருபோதும் கொண்டு வராது. தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வையும் ஒருபோதும் வழங்கவும் மாட்டாது. இது வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கும், அவர்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் தெரிந்த விடயம்.

ராஜபக்ஷக்களின் கடந்த ஆட்சியில் பேச்சு மேசைகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பல தடவைகள் அழைக்கப்பட்டு இறுதியில் ஏமாற்றப்பட்டனர்.

அதேபோல் இந்த ஆட்சியில் முதலாவது பேச்சைக்கூட நடத்தாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏமாற்றியுள்ளார்.

முதலாவது பேச்சுக்கு முதல் நாள் காலை அழைப்பு விடுத்த ஜனாதிபதி செயலகம், அன்று மாலையே பேச்சை ரத்துச் செய்துள்ளது என ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

பேச்சு ரத்துச் செய்யப்பட்டமைக்கான காரணத்தை ஜனாதிபதி செயலகம் இன்னமும் அறிவிக்கவில்லை. ஆனால், சர்வதேச அழுத்தத்தைச் சமாளிக்கவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை பேச்சுக்கு ஜனாதிபதி அழைத்திருந்தார் என்பது உண்மை.

எனினும், இறுதியில் அந்தப் பேச்சை நடத்தாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை ஜனாதிபதி ஏமாற்றியுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சி மலர்ந்தால் தமிழர்களுக்கான தீர்வை நாம் வழங்கியே தீருவோம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தமிழ் மக்களுக்கு எமது கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியே தீருவார். - என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.06.2021இல் வெளியிடப்பெற்றது.